# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: 04 கணை: 28 செப்டம்பர் -2023







சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...

# குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com


# உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உள்ளத்திலிருந்து... | 1 |
| காட்சியும் கருத்தும் | 2 |
| கூட்டுறவுக் கற்றல் | 3 |
| "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 19 | 5 |
| இணையவழிமுகம் தெரியாத உறவுகள் | 6 |
| கர்ணன் கற்றது வித்தை அல்ல, வேதம்! | 8 |
| மாற்றத்திற்கான சிந்தனை 02 | 9 |
| சமூக மாற்றம் | 10 |
| இன்னும் சொற்ப நாட்கள் தான் | 11 |
| தானம் வேறு.... தர்மம் வேறு.... | 11 |
| மூலிகைத்தோட்டங்களின் முக்கியத்துவம் | 12 |
| 200 வது நாவலர் விழா விமர்சனம் | 14 |
| கல்லாத அரசனும் காலனும் ஒன்றே. | 16 |
| இலக்கைத் தொட்டுவிடலாம்... | 18 |
| ஒரே அத்தியாயம் தரும் பத்து சமூக வாழ்க்கைத் தத்துவம் | 18 |
| பேசும் படங்கள் ! | 19 |



குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...




குருசேத்திரம் கணை 26 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் அகமகிழ்வடைகின்றேன். தனிமனிதர்கள் எந்தச் செயலைச் செய்யும் போதும் பேரார்வத்துடன் அச் செயலில் ஈடுபட வேண்மே தவிர பேராசை கொண்டு அதில் ஈடுபடக் கூடாது. ஏனெனில் பேரார்வம் என்பது எதிலும் அல்லது எதைப் பற்றியும் மெய்பபொருள் காண வேண்டும், புத்ததாக்கம் புரிய வேண்டும் என்ற மனப்பாங்காக மிளிரும் போது பேராசை என்பது பிறரை விட உயர்ந்த இடத்திற்கு வருவதே அவசியம் எனும் பொறாமை மிகு மனப்பாங்காக பரிணமிக்கின்றது.

**“இடுக்கண் வருங்கால் நகுக**
**அதனை அடுத்தூர்வது அஃதொப்ப தில்”**

வாழ்வில் நாம் முகங்கொடுக்கும் இன்னல்களைக் கண்டு துவண்டு விடாமல் மகிழ்வுடன் அவற்றை எதிர் கொள்ளப் பழக வேண்டும. இதனால்தான் துன்பம் வரும் வேளையிலே சிரியுங்கள் என்று அன்றே வள்ளுவர் கூறினார். அத்தோடு உங்களது வாழ்க்கையை நீங்களே வாழப் பழகிக் கொள்ள வேண்டும். யாரிலும் தங்கி வாழக்கூடாது. ஆலோசனைகளைப் பிறரிடமிருந்து பெறுவது நல்ல பழக்கம் தான் ஆனால் முடிவுகள் உங்களதாக இருக்க வேண்டும். அவை தன்னம்பிக்கை நிறைந்தவையாகவும், தீர்க்கமானவையாகவும் அமைய வேண்டும். எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும் போது ஏமாற்றங்களும் அதிகரிக்கின்றன. எனவே யாரையும் சார்ந்தும் வாழாதீர்கள், யாரின் சாயலைப் போல இல்லையென அதிருப்தியுடனும் வாழாதீர்கள். திருப்தியற்ற மனப்பாங்கிருந்தால் அதைமாற்றிக் கொள்ள மாற்றுத் திறனாளிகளை முன்மாதிரியாகக் கொள்ளுங்கள் அவர்கள் எவ்வாறு “போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து” என வாழ்கிறார்கள் என்று உற்று நோக்குங்கள் அதனால் திருப்தியடைவீர்கள் திருந்தி வாழ்வீர்கள்”

இவ்வாறு பேரார்வத்துடன், தன்னம்பிக்கை மிக்கவர்களாக, மனம் நிறைந்து புன்னகைத்து, திருப்தியுடன், உங்கள் சொந்தக்காலில் நீங்கள் வாழத் தயாராகும்போது இந்த உலகு உங்களை முன்மாதிரியாகக் கொள்ளும். ஆதலால் மாணவ ஆசிரியர்களாகிய நீங்கள் முதலில் இவ்வாறு உங்கள் வாழ்வைத் தொடர வேண்டும் பள்ளிகளில் உங்களை நம்பி வரும் சிறார்களுக்கும் கல்வியால் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாட்டின் ஊடாகவும் பேரார்வத்தையும், மனநிறைவையும் தீர்மானம் எடுக்கும் திறனையும் வளர்த்து “படித்ததினால் வாழ்வைப் பிடித்து வாழ்கிறோம்” எனக் கூறும் சந்ததியாக்க வேண்டும் என அன்பாக வேண்டி எனது ஆசிரியர் உரையை நிறைவு செய்கின்றேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

**திரு. சு. பரமானந்தம்**










?

**“குருசேத்திரம்”** மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.

**குருசேத்திரம் உங்களின் களம்...**


அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ gurusepththiram@gmail.com

# கூட்டுறவுக் கற்றல்

## (Cooperative Learning)

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




**5.2 குழும விதிமுறைகளின் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மிருதிறன்கள் சில பின்வருமாறு:**

5.2.1 நாங்கள் எப்போதும் ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் புரிந்தணர்வுடனும் நடந்துகொள்கிறோம்.

5.2.2 நாங்கள் எப்போதும் புதிய யோசனைகளை ஊக்குவிக்கிறோம் மற்றும் அனைத்து பரிந்துரைகளையும் கவனமாக கருத்தில் கொள்கிறோம்.

5.2.3 நாங்கள் எப்போதும் எங்கள் கருத்துக்களை குழுமத்திற்கு அல்லது அணிக்கு நியாயப்படுத்துகிறோம்.

5.2.4 நாங்கள் எப்போதும் மற்றவர்களின் பலங்களையும், இயலுமைகளையும் ஏற்றுக்கொண்டு செயலுறு நிலையில் செயற்படுகிறோம்.

5.2.5 நாங்கள் எப்போதும் ஒரு குழுமமாக அல்லது அணியாக முடிவுகளை எடுப்போம்.

5.2.6 நாங்கள் எப்போதும் ஒரு ஆசிரியரின் வழிகாட்டலுடன் சுய அனுபவங்கள் மூலம் அறிவைக் கட்டுமானஞ் செய்யவும் பகிர்ந்துகொள்ளவும் முயற்சிப்போம்.

5.2.7 நாங்கள் எப்போதும் பெற்றுக்கொள்ளும் அறிவை அல்லது தேர்ச்சியை பயிற்சிப்படுத்துவதன் மூலம் கல்வியின் தேசிய இலக்கையும் அடிப்படைத் தேர்ச்சிகளையும் நினைவிருத்தி சமநிலை ஆளுமையுள்ள பிரசையாக எதிர்காலத்தில் மிளிர்வோம்.

### 6.0 முன்னாயத்தம் அல்லது தயார்படுத்தல்

சுய அனுபங்கள் மூலம் கேட்டு, பார்த்து, செய்துபார்த்து மற்றவர்களுடன் பகிர்ந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கக் கூடியவகையில் மாணவர்கள் அறிவுறுத்தலுக்கு ஏற்றவகையில் குழுமமாக செயற்படக்கூடிய வகையில் இருக்க வேண்டும், மேலும் குழுக்களின் வகை, குழுப்பிரிப்பு நுட்பங்கள் வகுப்பறைச் சூழமைவுகளின் அடிப்படையில் அமைதல் வேண்டும். இதற்காக பல்வேறு குழுப்பிரிப்பு முறைகளை ஆசிரியர் கையாள வேண்டும். மாணவர்கள் கொண்டிருக்கும் சமூகத் திறன்கள், அறிகை ஆற்றல்கள். பன்முக நுண்மதி ஆற்றல்கள், மாணவர் அடிப்படை இயல்புகள்

பௌதீக தோற்றங்கள், பிறந்தநாள், பிறந்த கிழமை, மாதம், வயது மற்றும் சமூகப்பண்புகள், உத்த குணாதிசயங்கள், நலன்கள் மற்றும் அறிவுறுத்தல் நோக்கங்கள் போன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி குழுக்களை உருவாக் கலாம்.

கற்றல் பேறு மற்றும் கற்றல் நோக்கங்களைத் மாணவர்களின் அடைவு மட்டங்களுக்கு ஏற்ப தேர்ந்தெடுக் கவும். உதாரணமாக, மாணவர்கள் ஒரு விடயம் பற்றிய தங்கள் கருத்தை ஆதாரங்களுடன் முன்வைக்கவும், மாணவர்கள் குழுக்களாக அல்லது அணியாக ஒத்துழைப்புடன் செயலுறு நிலையில் அறிவை கட்டுமானஞ் செய்துகொள்ளு வார்கள் என்ற கருதுகோளுக்கு ஏற்ப குறிப்பாக கற்றலில் சம சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இங்கு சம சந்தர்ப்பம் என்பது மாணவரின் இயலுமை மட்டத்திற்கு ஏற்ப வழங்கப்படும் உதவி அல்லது வழிகாட்டலின் அளவை அல்லது முறையை கருத்திற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்களின் நேர்மறையான தனிப்பட்ட ஆற்றல்களையும் நடத்தைக்கோலங்களையும் கற்றலுக்கான ஊக்கியாகக் கொள்ள வேண்டும், மாணவர்கள் திறன்களைப் பயிற்சி செய்ய பகிர்ந்துகொள்ள, உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரக்கூடிய வகையில் ஆசிரியர் ஒவ்வொர விடயங்களிலும் தரவிருத்திப் பயன்பாட்டையும் அதன் திருப்தியான கிடைப்பளவையும் உறுதிசெய்து கொள்ளுதல் வேண்டும், மேலும் அவர்கள் எவ்வளவு வினைத்திறன், விளைதிறனுடன் கற்றல் செய்முறையில் ஈடுபடுகிறார்கள் என்பதைப் பற்றி சிந்தித்து தர்க்கரீதியாகச் செயற்பட மாணவர்களை ஊக்குவிக்கக் கூடிய வகையில் முன்னாயத்தமாக குழுக்களைத் திட்டமிட வேண்டும்.

## 7.0 அறிவுறுத்தல் மற்றும் செயற்பாடுகள்

குழுமங்கள் தீர்மானிக்கப்பட்டதும், மாணவர்களுக்கான மிக முக்கியமான அடுத்த கட்டம் தொடங்குகிறது. கற்பித்தலிற்கு, கற்றல் பேறுக்கு பொருத்தமான உள்ளடக் கத்தின் அடிப்படையில் விடயத்தெரிவும் தரவிருத்தி உள்ளீடு களும் இருக்க வேண்டும், மாணவர்களின் கற்றலை மேம் படுத்தவும் தனி மாணவன் பயன்பெறக்கூடியவகையிலும் குழும உறுப்பினர் ஒவ்வொருவரும் பயன் பெறக்கூடிய வகையிலும் அறிவுறுத்தல்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு செயற்பாடம் யார், எதை, எப்படி, எதன் உதவியுடன் எச்சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும் அல்லது பயன்படுத்த வேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். மாணவர்கள் குறிக்கோள்கள், அறிவுறுத்தல் பணிகள் மற்றும் அடைவுக்கான மட்டங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

கூட்டுறவு கற்றல், குழுமங்களுக்கான அறிவு திறன் மற்றும் மனப்பாங்கு மாற்றத்தை இலகுவாக்குவதற்கு மாணவர் செயற்பாடுகளை அவதானித்து மதிப்பாய்வு செய்து தேவை யான பின்னூட்டல்களை வழங்க வேண்டும். அறிவுறுத்தலின் போது, குழுக்களை கண்காணிக்கவும், மென்திறன் நடத்தை களை வலுப்படுத்தவும், அவதானிப்புகளை நடத்தவும், சமூக திறன்களை மதிப்பீடு செய்யவும் அல்லது மாணவர்களை நேர்காணல் செய்யவும் தேவையான உருவாகுநிலை கணிப்பீட்டு முறைகளை முன்கூட்டியே தயார்படுத்த வேண்டும்.


தொடரும்...

## “இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 19


## கதைகளால் நியமாகி...

# வாழ்வின் இரகசியம்

ஒரு முறை ஒரு சிறுவன் ஒரு அரசனது அரண்மனைக்கு சென்றான். அவன் ஒரே ஒரு இரவு அரண்மனையில் தங்கிக்கொள்வதுக்கு அனுமதி கேட்டான். அரசன் ஏற்றுக்கொண்டான். சிறுவன் அங்கு தங்கினான். அடுத்த நாள் காலை சிறுவன் அரசனிடம் வந்து அவனுக்கு கொடுக்கப்பட்ட தங்குமிடம் பற்றி குறைகளை முடிவுன்றி குறை கூறிக்கொண்டு இருந்தான். அரசன் இது போன்றவர்களுக்கு ஒரு நாள் தங்குமிடம் கொடுத்ததே மிகவும் அதிகம் என்று சொல்லி அந்த சிறுவனை உடனே வெளியேற்றுமாறு கட்டளையிட்டான். வருத்தமடைந்த சிறுவன் ஒரு துறவியிடம் சென்று நடந்ததை கூறினான். அவர் ஒன்றும் கூறவில்லை. அவனிடம் வெறுமனே தன் சீடனாகி விடும்படி கூறினார்.



சில மாதங்கள் கழித்து துறவி அந்த அரசனை சந்திக்க போவதாகவும் அவனையும் கூட வருமாறும் கூறினார். அவர்கள் அரசனிடம் சென்று அரண்மனையில் சென்று சில காலம் தங்க அனுமதி கேட்டனர். அரசனும் அனுமதி கொடுத்தான். அடுத்த நாள் காலை அரசன் துறவியிடம் அவருக்காக செய்த ஏற்பாடுகள் சௌகரியமாக இருக்கின்றதாக எனக் கேட்டான்.



செய்து தந்த ஏற்பாடுகளுக்கு அரசனுக்கு இதய பூர்வமாக நன்றி கூறினார். அரசன் மிகவும் சந்தோசம் அடைந்து அவனது ஆட்களுக்கு அவர்களது வசதியை மேலும் இன்னும் நன்றாக கவனித்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டான். துறவி சிறுவனிடம் சொன்னார் இப்பொழுது பார்த்தாயா? இது தான் வாழ்வின் இரகசியம். நன்றியுணர்வுடன் இரு உன்மீது அன்பு பொழியப்படும். கொடுக்கப்பட்டிருப்பதில் தவறுகளைக் கண்டுகொண்டிருப்பதுக்கு பதிலாக நன்றியுடன் இருக்கும் பொழுது நீங்கள் நேர்மறையான அதிர்வுகளை வெளிப்படுத்துகின்றீர்கள்.

***நீதி : நன்றியுடன் இரு நீ மேலும் நன்மைகளைப் பெறுவாய்.***

# இணையவழிமுகம் தெரியாத உறவுகள்

சிவராசா டஜானா - ஆரம்பப்பிரிவு



இன்று அவனை முதன் முதலாக நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேன். மனம் படபடத்தது. அவன் முகத்தைத்தான் பார்க்கவில்லையே தவிர அவன் உள்ளத்தை இணையத்தில் கடந்த சில மாதங்களாகப் பார்த்திருக்கிறேன். அவன் பெயர் அனு. இசைதான் அவன் ஈர்ப்பு. அவன் வயதை நான் கேட்டதில்லை. எப்போதும் படித்துக்கொண்டிருப்பதாகச் சொல்வான். அதை வைத்து அவன் பள்ளியில் படிப்பவனாக இருக்கவேண்டும் என முடிவு செய்தேன்.

“அனிகா, அதிகாலையில் எங்கே புறப்படுகிறாய்?” என்றார் அம்மா. அவருக்கு இதை நான் சொன்னால் புரியாது. இணையத்தில் சந்திப்பவனை எல்லாம் நம்பக்கூடாது என்பார். அவர்கள் பழைய காலம். இணையத்தில் வருபவர்கள் எல்லாம் ஏதோ தப்பானவர்கள் பொய்சொல்பவர்கள் என்ற எண்ணம். இப்பொழுது அங்குதான் ஆண்களும் பெண்களும் சந்தித்துக் கொள்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே அனுவைப் பற்றிய விஷயங்களை அவர்களிடம் இருந்து மறைத்து வந்தேன். அவனை நேரில் சந்தித்தபின் என் பெற்றோருக்கு அறிமுகப் படுத்தலாம் என்று காத்திருந்தேன்.

“என் சினேகிதி மாலா வீட்டிற்குப் போகிறேன். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து வீட்டுப்பாடம் செய்யப்போகிறோம்” என்றுவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டேன். அனுவிற்கு என் உண்மையான பெயர் தெரியாது. இணையத்தில் உண்மையான பெயரைக்கொடுக்கும் முட்டாளில்லை நான். நேரில் சந்தித்தபின் என் பெயரை அவனுக்குச் சொல்லலாம் என்று காத்திருந்தேன்.

அனுவின் பேச்சிலிருந்து அவன் கனிவானவன், வலுவானவன், புத்திமிகுந்தவன் என்பதைப் புரிந்துகொண்டேன். அவனை அழகானவனாகக் கற்பனை செய்தேன். மனதிற்குள் அதுதான் சிறிது நெருடல். அவன் பார்ப்பதற்கு நன்றாக இல்லையென்றால் எனக்கு அவன்மேல் தோன்றிய காதல் மறைந்துவிடுமா? என்னை நேரில் பார்க்கும்போது அவன் மனம் மாறிவிடுமா?

படித்து டாக்டர் ஆகவேண்டும் என்பது என் ஆசை. அதை அவன் புரிந்துகொள்வானா? அவன் புத்திசாலி என்பதால் நன்றாகப் படிப்பான் என்ற என் நம்பிக்கை சரியானதா? அவனைச் சந்திப்பதாகக் கூறிய உணவகத்தை அடைந்து சுற்றும் முற்றும் பார்த்தேன். என் கற்பனையில் தோன்றிய அவன் உருவத்தை அங்கே காணவில்லை. வாசலை நோக்கியபோது அங்கு என் சிற்றப்பா.

நான் சினேகிதி வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு இங்கே வந்ததை அவர் அம்மாவிடம் சொல்லிவிடுவாரோ என்ற பயம் என்னை அவர் கண்ணில் இருந்து ஒழிந்துகொள்ள வைத்தது. உள்ளே வந்தவர் ஒவ்வொரு மேஜையாகக் கண்களால் துலாவினார். நான் ஒரு தூணுக்குப் பின்னால்

ஒழிந்தபடி அவர் போய்விடவேண்டும் எனப் பிரார்த்திக்க ஆரம்பித்தேன். அங்கிருப்பவர்களில் யார் தனு என அலசிய போது அவனிடம் இருந்து செய்தி வந்தது. “நான் உணவகத்திற்கு வந்துவிட்டேன். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?” என்றது செய்தி. நான் பதற்றத்துடன் சிற்றப்பாவை நோக்கிய போது அவர் தலைகுனிந்து கைத்தொலைபேசியில் எதையோ எழுதிக்கொண்டிருந்தார். அவர் முடித்து நிமிர்ந்ததும் என் தொலைபேசியில் மறுபடியும் செய்தி, “நான் நீல நிறச் சட்டை அணிந்திருக்கிறேன்,” என்றது.



அங்கு நீல நிறத்தில் உடை அணிந்திருப்பவர் சிற்றப்பா மட்டும்தான். எனக்குள் சந்தேகத் தீ பற்றிக் கொண்டது. “உங்கள் உண்மையான பெயர் என்ன?” என்று நான் செய்தி அனுப்பிவிட்டு என் சந்தேகம் பொய்யாக இருக்கவேண்டும் என்று கண்ணுக்குத் தெரியாத அந்த ஆண்டவனிடம் மன்றாடினேன்.

சிற்றப்பா தொலைபேசியைப் பார்த்துவிட்டு சில வினாடிகள் சிந்திப்பது தெரிந்தது. அவர் மறுபடியும் எழுதிய போது “சங்கரன்” என்று பதில் வந்தது. உடல் நடுங்கித் தலை சுற்ற ஆரம்பித்தது. கண்களில் இருந்து கண்ணீர் கொட்ட நான் பின் கதவு வழியாக வெளியேறினேன்.

இத்தனை காலமும் நான் காதலித்தது என் சிற்றப்பாவை என்ற நினைப்பு என்மேலேயே அருவருப்பை ஏற்படுத்தியது. அவருடன் நான் பகிர்ந்துகொண்ட விடயங்களை எண்ணும் போது பூமி இரண்டாகப் பிழந்து என்னை உள்ளே வாங்கிக் கொள்ளாதா என்ற ஏக்கம் தலைதூக்கியது.

வீட்டை அடைந்து வேகமாக அறைக்குள் செல்லும் என்னைப் பார்த்து அம்மா கேட்டார், “மாலா வீட்டில் படிக்கப் போவதாகச் சொன்னாயே, ஏன் வந்துவிட்டாய்?”

“எனக்குத் தலைவலி,” என்றுவிட்டுக் கட்டிலில் விழுந்தேன். “எங்கே உங்களைக் காணவில்லை?” என்றது அனுவின் செய்தி. நான் தொலேபேசியைத் தூர எறிந்துவிட்டு முகத்தைத் தலையணைக்குள் புதைத்துக்கொண்டேன். அனுவின் செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தன. அவனுக்கு நான் யார் என்ற உண்மை தெரியவே கூடாது.

எப்படி நவீன உலகம் புரியாத அம்மாவிற்குத் தெரிந்த விஷயம் எனக்குத் தெரியாமல் போனது? ஆறு மாதங்கள் அவனுடன் பேசியபோதும் ஒருமுறைகூட அவன் சிற்றப்பா சங்கரனாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லையே. அதேபோல் அவனுக்கும் நான் யாரென்று தெரியவில்லையே. எனக்குத் தெரிந்த உலகம் இணையம்தான். எப்படி இந்த உலகை நம்புவது? மனதில் எதிர்காலத்தைப் பற்றிக் கேள்விகள் எழுந்தன. அனுவைப் பொறுத்தவரை அவனை நான் கைவிட்டுவிட்டேன். என் மனதிலோ நிரந்தரமான தழும்பு.

***“ ஆசிரியர் என்ற வகையில் இவ்வாறான மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பொறுப்பு எம்முடையது தாய் பேச்சை கேட்காத பிள்ளைகள் ஆசிரியர் பேச்சை வேதமாக எண்ண தயாராக இருப்பார்கள்.***

# கர்ணன் கற்றது வித்தை அல்ல, வேதம்!



*கர்ணன் பிறப்பால் சத்ரியன். வீரத்துக்குக் குறைச்சல் இல்லை. இருந்தாலும் குரு வேண்டுமே? துரோணாச்சாரியார் மறுத்துவிட, கிருபாச்சாரியாரிடம் ஒரு நாள் அதிகாலை போகிறான் கர்ணன்.*

மாணவர்களின் திறமையை சோதிக்க, வானத்தில் பறக்கும் ஒரு பறவையை குறிபார்த்து வீழ்த்தச் சொல்கிறார் குரு.

அர்ஜுனன் ஒரே அம்பில் பறவையை வீழ்த்திவிட்டு தேரேறிப் போய்விட்டான்.

இப்போது கர்ணனின் முறை. அம்பை நாணில் பூட்டியாயிற்று. ஒரு கணம் பறவையை வானில் குறி பார்த்தவன் வில்லையும் அம்பையும் கீழே வைத்து விட்டான்.

மிகச் சிறந்த வில் வீரனான கர்ணன் அப்படிச் செய்தது குருவுக்கு அதிசயம். காரணம் கேட்கிறார்.

குருவே இது மிகவும் அதிகாலை நேரம். இந்த நேரத்தில் ஒரு பறவை விண்ணில் பறக்கிறது என்றால் நிச்சயம் தன் குஞ்சுகளுக்கான உணவைக் கொண்டு போகிறது என்றுதான் பொருள். இப்போது திறமைக்காக அதைக் கொன்றுவிட்டால் நான் வீரனாவேன். ஆனால் அந்த இளம் குஞ்சுகள் அனாதை ஆகிவிடும். எனவே நான் கொல்ல மாட்டேன் என்றானாம்.

கலங்கிப்போன குரு சொன்னாராம், “கர்ணா நீ கற்றது வித்தை அல்ல வேதம்” என்று பாராட்டினார்!!!

பணத்தாலும், பதவியாலும், அதிகாரத்தாலும் நீங்கள் பலமானவர்களாக இருக்கலாம். அந்த பலத்தை உன்னை நேசிப்பவர்களிடமோ, அல்லது உன்னை விட பலம் குறைந்தவர்களிடமோ காட்டாதீர்கள்...

வாழ்க்கை ஒரு வட்டம். தொடங்கிய இடத்துக்கே வந்தாகனும்.

# மாற்றத்திற்கான சிந்தனை 02

எந்திரி. ச. சர்வராஜா
நீர்ப்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்

## போதைவஸ்துக்களின் நுழைவாயில்

எமது பிரதேசங்களில் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைவஸ்து பாவனை இன்றைய பேசுபொருளாக உள்ளது.

வேலியே பயிரை மேய்வது என்ற வார்த்தை இங்கே நன்றாக பொருந்துகிறது.

பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமைகள் கொண்டோர் இங்கு வழி வகுத்து கொடுப்போராக இருப்பது எமது மிகப் பெரிய துரதிஷ்டம்..

அதைவிட நாம் புரிந்துகொள்ள வேண்டிய மாற்றியமைக்க வேண்டிய முக்கிய விடயத்தை கொஞ்சம் விளங்கிக்கொள்வோம்.

போதை வஸ்துக்களின் நுழைவாயில் எது?

**1. கல்வி மீதான பெற்றோர்களின் திணிப்பு**

அதிகமான புள்ளிகளை பெற வேண்டுமென்ற திணிப்பு பிள்ளைகள் மீது கட்டவிழ்த்து விடப்படுகிறது.

தவறும் பட்சத்தில் திட்டுதல்களும் நெருடல்களும் ....... தொடர்கின்றன

இதனை பாவித்தால் மூளை நன்றாக இயங்கும் அதிக மதிப்பெண் பெற முடியும் என்ற அடிப்படையில் இதற்கான விளம்பரம் செய்யப்படுகிறது.

இது ஒரு ஊக்கி என்கிற அடிப்படையில் (போதைவஸ்து என்று தெரியாமல்) எடுக்கும் மாணவர்கள் ஆரம்பத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்று கொள்ளவும் முடிகிறது.

பின்னர்தான் இதற்கான அடிமைத்தனம் தொடங்குகிறது.

**2. மகிழ்வான கல்விமுறை இல்லை**

படிப்பு படிப்பு படிப்பு ... படிக்காவிட்டால் நடு ரோட்டில் நிற்க வேண்டிவரும் என்று சொல்லிச் சொல்லி தொடர்ந்து படிப்புக்குள் தள்ளப்படுகின்றனர்.

மாணவ பருவம் மகிழ்வான பருவம் என்பதே உடைபட்டு போய்விட்டது.

ஆகவே இது மகிழ்வை கொடுப்பதாக உணர்கின்றனர்.

**3. பதற்றமான குடும்ப சூழல்**

பெரும்பாலான குடும்பங்களில் பதற்றமான சூழல் நிகழ்கின்றன.

பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான அச்சம் நிகழ் காலத்தில் நிம்மதியாக இல்லை.

திருவிழாக்கள் கொண்டாட்டங்களில் கூட மகிழ்வான மனப்பாங்குடன் இல்லை. பிள்ளைகளுக்கு எங்கும் இனிய சூழல் இல்லை...

இவை பிள்ளைகளை திசை திருப்புகின்றன.

**4.கல்விக்கு மட்டுமே முன்னுரிமை**

பிள்ளைகள் விளையாடுவதற்கோ அல்லது பிற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பும் ஊக்கமும் வழங்காமல் கல்விக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப் படுகிறது...

நாம் மாற வேண்டிய விடயங்கள்

அதிக இடங்களில் அதிகமான ஆசிரியர்களிடம் கற்றால் பிள்ளை அறிவாளியாக இருப்பான் என்கிற நிலை மாற வேண்டும்.

மகிழ்வான கல்விச் சூழல் உருவாக வேண்டும்.

எளிமையான குடும்ப சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும்.

வாழக் கற்றுக் கொடுக்கும் கல்வி முறை அமையவேண்டும்.

தொடர்ந்து பேசுவோம்...

---

*போதைப் பழக்கத்திற்கு அடிமை ஆகிறவர்கள்*
*முதமை அடைவதே இல்லை. ஏனெனில்,*
*இளவயதைத் தாண்டி அவர்களால்*
*வாழ முடிவதில்லை.*

---

## சமூக மாற்றம்

*மாற்றம் ஒன்றே மாறாதது-ஆனால்*
*மாற்றமும் மாறுகின்றது*
*கொஞ்சம் மாற்றம் தோற்றத்தில்*
*கொஞ்சம் ஏமாற்றம் வாழ்க்கையில்.*

*தராசிற்கு நியாயம் எல்லாம் தெரியாது*
*எந்த பக்கம் கனமாக இருக்கின்றதோ*
*அந்த பக்கம் சாய்ந்து விடும்*
*இந்த உலகமும் இப்படி தான் மாறும்.*

*அன்று ஊரடங்கு அறிவிப்பை கேட்டதும் ஓடிச்சென்று*
*வாங்கியது தங்கமும் வெள்ளியும் அல்ல*
*உயிர் வாழ தேவையான உணவே*
*அன்று உணவின் தேவை உணர்ந்தோம்.*

*பெரிய மாற்றம் வேணடும் என்றால்*
*நம்மை நாமே மாற்றிக்கொள்ள வேண்டும்*
*நம்மில் மாற்றத்தை ஏற்படத்தாது*
*மற்றவரில் மாற்றத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.*

*வாழ்க்கையில் நிறைய மாற்றம் வரும்-ஆனால்*
*நாம் எடுக்கும் முடிவுகள் தான் மாற்றத்தை கொண்டுவரும்*
*ஒவ்வொரு வெற்றிக்கான மாற்றமும்*
*எம்மிடம் இருந்து ஆரமபிக்கவேண்டும்........*

**நிதுஷா பத்மநாதன் - ஆரம்பக்கல்வி**

## இன்னும் சொற்ப நாட்கள் தான்

**ஆம் இன்னும் சொற்ப நாட்கள் தான் உங்கள் உறவுகளெல்லாம்...**
**பின்னர் மாரி மழையாக உங்கள் நேசங்களும் பகைமைகளும்...**
**படிப்படியாக ஓயத்தான் போகின்றன...**
**வந்த நோக்கம் நல் அறுவடைக்காக இருக்கட்டுமே!**
**அனைவர் பார்வைகளிலும்...**
**ஒருவர் சரியாக இருக்க வேண்டும் என எதிர் பார்க்க முடியாது...**
**தனித்துவங்களும் சிந்தனைகளும் நபருக்கு நபர் வேறுபட்டது என பல முறை கற்று விட்டோமே...**
**சற்று நம் சிந்தனைகளை நேரானதாக மட்டும் மாற்றுவோம்!**
**உங்கள் அக்கறைகளை அடுத்தவர் செய்யும் நல்ல விடயங்கள் மீது செலுத்துங்கள்...**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா...**
**பரீட்சைகளும் புள்ளிகளும் இலக்கங்கள் மட்டுமே...**
**நாம் இங்கிருந்து கொண்டு செல்வது நல்ல நினைவுகள் மட்டுமாக இருக்கட்டும்!**
**எம்மால் யாரும் துன்புற்று விட வேண்டாமே எனும் எண்ணம் உங்களை நீங்கள் நேசிக்க காரணமாய் இருக்கும்!**
**சில நாள் அவதனிப்பினால் உங்களுக்கு கூற தோன்றியது...**

டஜானா சிவராசா - ஆரம்ப பிரிவு

## தானம் வேறு... தர்மம் வேறு...




தானம் என்பது பிறருக்குத் தேவையானவற்றை அவர் கேட்டோ, அடுத்தவர் அவர் நிலை கூறி அறிந்த பின்னோ தருவது. இதுதான் தானம்...

இது புண்ணியக் கணக்கில் சேராது. ஏனெனில், இல்லாதவர் மற்றும் இயலாதவர் கேட்டபின் கொடையளிப்பது ஒரு மன்னனின் கடமை. ஒவ்வொரு மனிதனின் கடமையும் கூட.

ஆனால், தர்மம் என்பது எவரும் கேட்காமல் அவரே அறியாமல் அவர் நிலை அறிந்து கொடுப்பது. இதுதான் புண்ணியம் தரும். பசித்திருக்கும் ஒருவர் கேட்டபின் ஏதாவது தருவது தானம். அவர் கேட்காமலேயே அவர் பசியாற்றுவது தர்மம்......

- மகாபாரதம் -

# மூலிகைத்தோட்டங்களின் முக்கியத்துவம்

இலக்சிகா நாகேந்திரன் - விஞ்ஞானத்துறை



இன்றைய நவீன யுகத்தில், பரவி வரும் அசுரத்தனமான நோய்களிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியம். செயற்கை வாழ்வியல் முறையில் பயணித்துக்கொண்டிருக்கும் நாம், மீண்டும் இயற்கையை நோக்கி திசை திரும்ப வேண்டும் என்பது மனித உடலின் அன்பான உத்தரவு. உத்தரவுக்கு மதிப்புக் கொடுக்கும் விதமாக உடனடியாக இயற்கையின் படைப்புகளான மூலிகைத் தாவரங்களை, நம் உணவு மற்றும் வாழ்வியல் முறைக்குள் கொண்டு வருதல் முக்கியமானது.

‘உணவே மருந்து’ என்ற கோட்பாடுடைய பாரம்பரிய சித்த, ஆயுர்வேத மருத்துவத்தில் பல வகையான நோய் களைப் போக்கும் மூலிகைகளின் குறிப்புகள் பொதிந்துள்ளன. மேலும், மூலிகைகளைக் குறித்து மிகுந்த அறிவு கொண்ட பல்வேறு மக்கள் நம்மைச் சுற்றியே வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். மருத்துவ குணமுள்ள மூலிகைகளின் பயன்களை வெளிக்கொணரும் விதமாக, மூலிகைத் தாவரங்களை வீடுதோறும் வளர்க்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். மக்களின் அடிப்படை மருத்துவத் தேவைக்கு மூலிகைச் செடிகள் உபயோகப்பட வேண்டிய அவசியமும் கட்டாயமும் இன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

எந்த ஒரு நோயாகட்டும், அதை விரட்டுவதற்கு மூலிகைகளை நாடிய மரபு நம்முடையது. ஆனால், மரபு சிதைந்து மூலிகைகளின் இடத்தை மாத்திரைகள் பிடித்து விட்டன. இன்றையச் சமுதாயம். நமக்கு உண்டாகும் நோய்களுக்கு, மாத்திரைகளை சார்ந்திருப்பதற்கு பதிலாக, மூலிகைகளை சார்ந்திருக்கத் தொடங்கினால், இயற்கை முறையில் நோய்களை வெல்லலாம்.

ஒவ்வொரு நோய்க்கும் பல்வேறு வகையான மூலிகை கள் நம்மிடையே இருக்கின்றன. அவற்றுள் சளி, இருமல் எதிர்த்துப் போரிட கற்பூரவள்ளி, தூதுவளை, நொச்சி, திருநீற்றுப்பச்சிலை, கண்டங்கத்திரி, தும்பை, துளசி வகைகளை வளர்க்கலாம்.

தோல் நோய்களைக் கட்டுப்படுத்த குப்பைமேனியும் கஸ்தூரி மஞ்சளும் சிறந்த மூலிகைகள்.

ரத்த அணுக்களை அதிகரிக்க உதவும் கறிவேப்பிலை, கரிசாலை, மாதுளை மற்றும் கீரை வகைகளை வளர்க்கலாம்.

உடலைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள செம்பருத்தியும் மருதாணியும் அவசியம்.

போன்று சில மூலிகைகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன.

இட வசதியைப் பொறுத்து மூலிகைகளின் எண்ணிக்கைகளை அமைத்துக்கொள்ளலாம். வாய்ப்பிருந்தால் நேரடியாக நிலத்தில் தாவரங்களை வைத்துப் பராமரிப்பது சிறந்தது. இல்லையேல், தொட்டிகளிலாவது மூலிகைகளை வைத்து வளர்க்கலாம். அதையும் தாண்டி மாடித் மூலிகைத் தோட்டம் வைத்தும் தேவையான பயன்களைப் பெறலாம்.

நாம் விரும்பி, உயிர் கொடுத்த மூலிகைத் தோட்டம், மருந்தாகப் பயன்படுவது மட்டுமல்லாமல், நச்சுத் தன்மையுடைய காற்றைப் புனிதமாக்கி, வாழும் வீட்டைச் சுற்றி இயற்கையான மூலிகை வாசனையைப் பரப்பி, நம் உள்ளத்தை உற்சாகப்படுத்தும். வெளியேறும் தாவர சுவாசத்துடன், நம் சுவாசமும் தங்கு தடையின்றி உறவாடுவதன் காரணமாக, உடலிலும் மனதிலும் உள்ள பல நோய்கள் ஆகாயத்தோடு சலனமின்றிக் கலந்துவிடும்! தினமும் சிறிது நேரம் தாவரங்களுடன் செலவிடுவதன் மூலம், சோர்வடைந்த மனமும் உடலும் புத்துணர்ச்சி அடைவது உறுதி.

நாமே மூலிகைகளையும், தேவைப்படும் காய்களையும் வளர்த்து பராமரிப்பதன் மூலம், பூச்சிக்கொல்லி மருந்துகளோ, இரசாயன உரங்களோ பயன்படுத்தாமல் அவற்றால் ஏற்படும் பக்கவிளைவுகளையும் தவிர்த்து ஆரோக்கியமாக வாழலாம்.

உடல் நோய்களைப் போக்கி மூலிகைகள் காட்டும் தாவரநேயம், மனிதநேயத்தைவிட உன்னதமானது! வீட்டுக்கு ஒரு மூலிகைத் தோட்டம் அமைப்போம், வாழ்வின் அழகை ரசிக்க, உன்னதமான மென்மையோடு! மனிதர்கள் மட்டுமல்ல, விலங்குகள், செடி, கொடிகள்... என எல்லா உயிர்களும் ஒன்றே! அவை அத்தனையின் மீதும் அன்பு செலுத்தப் பழகுவோம்! வாழ்க்கை ஆனந்தமயமாகும்’



# 200 வது நாவலர் விழா விமர்சனம்

டஜானா சிவராசா - ஆரம்பக்கல்வி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த 18.01.2023 புதன் கிழமை காலை 8.30 மணியளவில் எமது கல்லூரி சமூகத்தின் தமிழ் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் நாவலர் பெருமானின் 200 வது ஆண்டு வெகு விமர்சையாக தமிழரின் பண்பாட்டினை பறைசாற்றும் விதமாக இன்னிய வாத்திய இசை முழக்கத்துடன் மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றி மும்மத வழிபாட்டுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக எமது கல்லூரியின் மாணவ ஆசிரியர்களினால் சிறந்த முறையில் பாடலுடன் கூடிய வரவேற்பு நடனமும் வரவேற்புரையும் நிகழ்த்தப்பட்டது. தலைமையுரையினை விருந்தினர்கள் பற்றிய அறிமுகங்களுடன் ஆரம்பித்த எமது கல்லூரியின் பீடாதிபதி நிகழ்வின் பிரதம விருந்தினர் பற்றி கூறுகையில் ‘‘இவர் எமது தமிழ் சமூக வளர்ச்சியில் பங்கேற்கும் முகமாக பல நல்ல நூல்களை எழுதியுள்ளார். அவரால் எழுதப்பட்ட நூல்களை நோக்குவோமாயின் பன்னிரு திருமுறை அறிமுகம், ஞானப்பழம், செந்தமிழும் நாபழக்கமும், சங்கமும் தமிழும், வன்னிப்பிரதேச வயற்பண்பாடு என்பவற்றை குறிப்பிட முடியும். இவர் பெற்ற கௌரவங்களாக: ஆளுனர் விருது (வடக்கு-கிழக்கு மாகாணம்), நாவலர் விருது (மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம்), கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுதுரை விருது (நாடகம்-யாழ் இலக்கிய வட்டம்), முத்தமிழறிஞர் சொக்கன் விருது (நாடகம்-யாழ் இலக்கிய வட்டம்), வாழ்நாள் சாதனையாளர் விருது (இரா.உதயணன்-இலங்கை இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் எழுத்து கல்வியமைச்சு கொழும்பு), பாரதி விருது (கவிதை-மன்னார் மாவட்ட சைவ கலை இலக்கியம்) போன்றவை இலங்கையில் வழங்கப்பட்டவையாகும்.



இவர் இந்தியாவில் பெற்ற விருதுகளாக விபுலானந்தர் படைப்பிலக்கிய விருது (தமிழ்நாடு எஸ்.ஆர்.எம் பல்கலைக் கழக தமிழ் பேராயம்), தமிழ்நாடு திருப்பூர் விருது, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற விருது, தமிழ்நாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழக விருது போன்ற விருதுகளை பெற்றுள்ளார்.

இவர் பெற்ற பட்டங்களில் காவியமாமணி, கலாநிதி திருநெறிய தமிழ்வேந்தர், வித்தியா சுரபி, முத்தமிழ் சுரபி, விநாயகர் புராண வித்தகர், முத்தமிழ்க் கலைச்சுடர் போன்ற சிலவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறு எமது பிரதம விருந்தினர் பற்றிய சிறப்புக் களையும், எமது சமூகத்தின் மீது அவரின் அக்கறையினையும் புலப்படுத்தும் விதமாக தலைமையுரையினை ஆற்றிச் சென்றார். தொடர்ந்து மன்றத்தலைவர் உரை, இசை நிகழ்ச்சிகள், நாவலர் பெருமயினை வெளிப்படுத்தும் விதமான கலைநிகழ்வுகளை தொடர்ந்து பிரதம விருந்தினர் இடம் பெற்றது.

இவ்வுரையில் ஆரம்பத்திலேயே எமது கல்லூயின் இன்னிய வரவேற்பு பாராட்டப்பட்டது. எமது கல்லூரியின் பீடாதிபதி தமிழ் அறிஞர்கள் மீது கொண்டுள்ள மதிப்பும் அவர்கள் பற்றிய சிந்தனைகளை எதிர்கால சந்ததியினருக்கு கடத்த வேண்டும் என்ற அவாவும் இந்த நாவலர் விழாவின் ஏற்பாட்டில் பிரதிபலித்துள்ளமையை குறிப்பிட்டது பொருத்த மானது என்று எனக்குத் தோன்றியது. அதுமட்டுமல்லாது எமது கலைநிகழ்வுகள் ஒவ்வொன்றினையும் அவர் இரசித்து இருந்தது மிகவும் வெளிப்படையாகவே அவரது பேச்சில் தெரிந்தது.




அத்துடன் எமது கல்லூரி தனக்கு கிடைக்கும் வளங்களினை மிகவும் சிரத்தையுடன்இ பேணி அவற்றின் மூலம் பயன் பெற்று உயர்கின்றது என்பதனையும் நாம் ஏன் நாவலர் போன்ற அறிஞர்களின் நினைவு நாட்களை கொண்டாட வேண்டும் என்பதனையும் மாணவ ஆசிரியர் களாகிய நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் பண்டைய இலக்கியப் பாடல்கள் மூலம் எமக்கு கலாநிதி.அகளங்கன் அவர்கள் வெளிப்படுத்தியமை எமது பீடாதிபதி அவர்கள் பிரதம விருந்தினர் பற்றி கூறிய அனைத்தும் உண்மை என பறைசாற்றியது. இவ்வாறு பல கருத்துக்களுடன் பிரதம விருந்தினர் உரை நிறைவு பெற்றது.

அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு மற்றும் நன்றியுரை இடம்பெற்று கல்லூரிக் கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

*****

# கல்லாத அரசனும் காலனும் ஒன்றே.

## திருமந்திரத்தில் கல்விப்பார்வை



*அறியாமை நம்மைக் கட்டி வைத்திருக்கிறது*
*அறியாமையிலிருந்து முளைத்த ஆசை நம்மைக்*
*கட்டி வைத்திருக்கிறது ஆசை காட்டி ஆசை*
*காட்டியே அதிகாரம் நம்மைக் கட்டி*
*வைத்திருக்கிறது.*

இப்படி, வாழ்ந்திருக்கும் காலம் முழுக்க ஏதேனும் ஒன்றால் கட்டுண்டே கிடப்பது நமக்கு இன்பம் தருவதா? கட்டறுப்பதல்லவா இன்பம் தருவது? கட்டறுத்து விடுவதுதான் கல்வி. கல்வியின் பயன் காசுண்டாக்குவதற்கு மட்டுமல்ல கட்டறுப்பது. கல்வி சாதியைக் கட்டறுக்கும் சமயத்தைக் கட்டறுக்கும் அதிகாரத்தைக் கட்டறுக்கும் ஆசையைக் கட்டறுக்கும் அறியாமையைக் கட்டறுக்கும். இவற்றை வழிமொழிகிறார் திருமூலர்.

*துணையதுவாய் வரும் தூயநல் சோதி*
*துணையதுவாய் வரும் தூயநல் சொல்லாம்*
*துணையதுவாய் வரும் தூயநல் கந்தம்*
*துணையதுவாய் வரும் தூயநல் கல்வியே.*

(திருமந்திரம் 294)

இருள் அண்டும்போது ஒளியாக வருவதும், வாதுரைக் கும்போது சொல்லாக வருவதும், பழைய வாசனைகள் கிறுகிறுக்க வைக்கும்போது அவற்றைத் தேய வைக்கும் நறுமணமாக வருவதும், எப்போதும் துணையாக வருவதும் தூய நற்கல்வியே என்கிறார்.

கல்வி என்பது அனைவருக்குமான தகுதி என்றாலும் ஆள்கிறவனுக்கு மிகக் கட்டாயமான, இன்றியாமையாத தகுதி எனவே, கல்வியைப் பொருளதிகாரத்தில், அரசியலில் வைத் திருக்கிறது வள்ளுவம்.

திருமூலர் சொல்கிறார்:

*கல்லா அரசனும் காலனும் நேர்ஒப்பர்*
*கல்லா அரசனில் காலன் மிகநல்லன்*
*கல்லா அரசன் அறம்ஓரான் கொல்எனபான்*
*நல்லாரைக் காலன் நணுகி நில்லானே*

(திருமந்திரம் 238)

கற்று அறியாத ஆட்சியாளனும் காலனும் ஒரே தன்மை உடையவர்கள். உயிரை வாங்கிவிடுவார்கள். சொல்லப் போனால் கற்று அறியாத அரசனைக் காட்டிலும் காலன் மிகவும் நல்லவன். கற்று அறியாத அரசனுக்கு அறம் என்றால்

என்னவென்று தெரியாது யாராக இருந்தாலும் வதைத்துக் கொல் என்பான். காலனை அப்படிச் சொல்லிவிட முடியாது.

### உண்மையை அறியாத ஆட்சியாளன்

இங்கே, கற்று அறியாத ஆட்சியாளன் என்பதற்குப் பள்ளிக் கல்வி கற்காத ஆட்சியாளன் என்று பொருள் கொள்ள வேண்டாம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இவற்றின் உண்மையை அறியாத ஆட்சியாளன் என்று கொள்க.

இப்படியெல்லாம் பொதுவாகக் கல்வியைப் பற்றித் திருமூலர் சில சொன்னாலும், திருமூலர் பேசும் கல்வி, திருக்குறளும் நாலடியும் பேசுவதுபோலப் பொதுநிலைக் கல்வி அன்று சைவ சமயம் சார்ந்த சிறப்புக் கல்வி சிவக் கல்வி. 'கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?' என்பது நம்மாழ்வார் திருவாய்மொழியானால், 'கற்பார் சிவபெருமானை அல்லால் மற்றும் கற்பரோ?' என்பது திருமூலர் திருமந்திரம்.

*குறிப்பு அறிந்தேன் உடல் உயிர்அது கூடி*
*செறிப்பு அறிந்தேன் மிகு தேவர் பிரானை*
*மறிப்புஅறியாது வந்து உள்ளம் புகுந்தான்*
*கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே.*

(திருமந்திரம் 290)

உயிர் ஏன் உடலுக்குள் வந்தது? என்ற கேள்வி எழுந்தபோது நான் கற்றிருந்த அடிப்படைக் கல்வி அதற்கு உடனடி விடை தராமல் என் நெஞ்சைக் கரித்தது எதிர்த்தது. அதற்கு மயங்காமல் விசாரிக்கத் தொடங்கினேன். நிலையானது எது, நிலையற்றது எது, எப்போதும் துணையாக என்னோடு இருப்பது எது, எப்போது வேண்டுமானாலும் என்னைக் கைவிட்டுவிடுவது எது, பற்றிக்கொள்ளத் தகுந்தது எது, பற்றிக்கொள்ளத் தகாதது எது என்று தெளிவாகத் தொடங்கியது. இந்த அறிவை ஆய்ந்து பெற்று அதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளத்தான் உயிர் உடலுக்குள் வந்தது என்னும் குறிப்பை இந்தத் தொடர் விசாரணையின் மூலம் நான் அறிந்தேன்.



தேவர் பிரானாகிய இறைவன் என்னோடு இருப்பதும், எனக்குள்ளே இருப்பதும் விளங்கத் தொடங்கியது. திரும்பிப் போகும் திட்டம் இல்லாது என் உள்ளத்துக்குள் புகுந்து கொண்டான் இறைவன். நாடு, நகரம், கோயில், குளங்கள் என்று நான் தேடித் திரிந்த பரம்பொருளை எனக்குள்ளேயே காட்டிய சிவக் கல்விதான் உண்மையான கல்வி. என் நெஞ்சைக் கறிக்காத கல்வி. குமட்டிக்கொண்டு எதிர்க்களிக்காத கல்வி என்று கல்விக்குச் சமய வண்ணம் பூசுகிறார் திருமூலர்.

தொடரும்...

குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# ஒரே அத்தியாயம் தரும் பத்து சமூக வாழ்க்கைத் தத்துவம்

அ.நிராஸ் - கணிதத் துறை

ஒன்று : செய்தியை சரிபார்த்துக் கொள்ளுங்கள், இல்லையெனில் அறியாமையில் தீங்கில் விழுந்து நஷ்டமடைவீர்கள்.

இரண்டு : உங்களில் இருகூட்டத்தார் சண்டையிட்டால் இணக்கம் ஏற்படுத்துங்கள்

மூன்று : அல்லாஹ்வை அஞ்சுங்கள், நீதி செலுத்துங்கள், நீதி செலுத்துவோரை அல்லாஹ் விரும்புகிறான்.

நான்கு : ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைக் கேலி செய்ய வேண்டாம். ஐந்து: உங்களுக்குள் நீங்கள் குறை கூற வேண்டாம்.

ஆறு : பட்டப் பெயர்களால் குத்திக் காட்ட வேண்டாம்.

ஏழு : பாவமான பெயர் (சூட்டுவது) கெட்டது. திருந்திக் கொள்ளாதவர்கள் அநீதி இழைத்தவர்கள்.

எட்டு : ஊகங்களில் அதிகமானதை விட்டு விலகிக் கொள்ளுங்கள்! சில ஊகங்கள் பாவமாகும்.

ஒன்பது : துருவித் துருவி ஆராயாதீர்கள்.

பத்து : உங்களில் ஒருவர் மற்றவரைப் புறம் பேசாதீர்கள், உங்களில் எவரேனும் இறந்த தமது சகோதரனின் மாமிசத்தைச் சாப்பிட விரும்புவாரா?

உங்களில் எந்த சமுதாயத்தில் இவை இருக்கிறது என்று ஒரு சில நிமிடம் சுயபரிசோதனை செய்துகொள்ளுங்கள், நன்மைகள் கிட்டும்.

## இலக்கைத் தொட்டுவிடலாம்...

முயற்சிக்கான இலக்கை நிர்ணயம் செய் !

அந்த இலக்கை நோக்கி பயணம் செய் !

பயணத்தின் போது வேகம் கொள் !

வேகத்தோடு விவேகமும் கொள் !

தடைகள் வரலாம் தாண்டிச் செல் !

பிழைகள் ஏற்படலாம் திருத்திக் கொள் !

தோல்விகள் காணலாம் கற்றுக் கொள் !

கற்றுக் கொண்டதை நினைவில் கொள் !

நினைவில் கொண்டதை பயிற்சி செய் !

பயிற்சியோடு முயற்சியும் செய் !

உனக்கான இலக்கை தொட்டுவிடலாம்...

M. Dinoja - Primary Course

# பேசும் படங்கள் !

## வாசகர் உள்ளத்திலிருந்து...

Forwarded

குருசேத்திரம் August 2023
பிறரின் ஏளனங்களும் எதிர்ப்புக்களுமே உங்கள் செயல்களுக்கான அங்கீகாரம்..............ஆம் உண்மை
உங்கள் ஆசிரிய தலையங்கம் எல்லோர்க்கும் குறிப்பாக மாணவர்களுக்கு சிறந்த அறிவுரை.
who is responsible for safety ....ஒவ்வொரு தனி மனிதனும் உணரவேண்டும்.
Science and Religion , wonderful comparative studies
Comparison .........மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து .....வீழ்ந்து விடாமல்
வாழப் பழகுங்கள்...
ஆழிக்குமரன் ஆனந்தன் பற்றிய குறிப்புகள் உட்ச்சாக குறிப்புகள் எல்லோர் மனத்திலும் வலுச்சேர்க்கும்.

Thank you for the opportunity

10:55 AM

Sinnaiah Pathmanathan

